# நவம்பர் – 25 – சனி

## புனித அலெக்சான்ட்ரியா கத்தரின்

**ஆண்டவரே, என் முழு இதயத்தாலும் உம்மைப் புகழ்வேன் வியத்தகு உம் செயல்களையெல்லாம் எடுத்துரைப்பேன். திபா. 9:1**

## முதல் வாசகம் : 1 மக்கபேயர் 6 : 1 - 13

அக்காலத்தில் அந்தியோக்கு மன்னன் மேற்கு மாநிலங்கள் வழியாகச் சென்றபோது, பாரசீக நாட்டு எலிமாய் நகர் பொன், வெள்ளி ஆகியவற்றுக்குப் புகழ்பெற்றது என்று கேள்விப்பட்டான். அதன் கோவிலில் மிகுந்த செல்வம் இருந்தது என்றும் கிரேக்க நாட்டை முதன்முதல் ஆண்ட மாசிடோனிய மன்னரான பிலிப்பின் மகன் அலெக்சாண்டர் அங்கே விட்டுச் சென்றிருந்த பொற்கேடயங்களும் மார்புக்கவசங்களும் படைக்கலங்களும் அங்கு இருந்தன என்றும் அறிய வந்தான். எனவே அந்தியோக்கு புறப்பட்டு நகரைக் கைப்பற்றிக் கொள்ளையடிக்க முயன்றான் ஆனால், முடியவில்லை ஏனெனில் அந்த நகர மக்கள் அவனது திட்டத்தை அறிந்திருந்தார்கள். அவர்கள் அவனை எதிர்த்துப் போரிட்டார்கள். ஆகவே அவன் பின் வாங்கி, பெரும் ஏமாற்றத்துடன் அங்கிருந்து பாபிலோனுக்குத் தப்பிச் சென்றான். யூதேயா நாட்டை எதிர்த்துச் சென்றிருந்த அவனுடைய படைகள் முறியடிக்கப்பட்ட செய்தியை அவன் பாரசீகத்தில் இருந்தபோது தூதர் ஒருவர் அவனுக்கு அறிவித்தார் ”லீசியா வலிமை வாய்ந்த படையோடு முதலில் சென்று யூதர்கள்முன் புறமுதுகு காட்டி ஓடிவிட்டான் முறியடிக்கப்பட்ட படைகளிடமிருந்து யூதர்கள் கொள்ளையடித்த படைக்கலன்கள், மிகுதியான பொருள்கள் ஆகியவற்றால் அவர்கள் வலிமை மிக்கவர்கள் ஆனார்கள் எருசலேமில் இருந்த பலிபீடத்தின்மேல் அந்தியோக்கு செய்து வைத்திருந்த நடுங்க வைக்கும் தீட்டை அவர்கள் தகர்த்தெறிந்தார்கள் திருஉறைவிடத்தைச் சுற்றிலும் முன்புபோல் உயர்ந்த மதில்கள் எழுப்பியுள்ளார்கள் அவனுடைய நகராகிய பெத்சூரைச் சுற்றிலும் அவ்வாறே செய்திருக்கிறார்கள்” என்றும் எடுத்துரைத்தார். இச்செய்தியைக் கேட்ட மன்னன் அதிர்ச்சியடைந்து மிகவும் நடுங்கினான் தான் திட்டமிட்டவண்ணம் நடவாததால் துயரம் தாங்காது நோயுற்றுப் படுத்த படுக்கையானான். கடுந்துயரம் அவனை ஆட்கொண்டதால் அங்குப் பல நாள் கிடந்தான் தான் விரைவில் சாகவிருந்ததை உணர்ந்தான். ஆகவே அவன் தன் நண்பர் எல்லாரையும் அழைத்து, ”என் கண்களினின்று தூக்கம் அகன்றுவிட்டது கவலையினால் என் உள்ளம் உடைந்து விட்டது. “எவ்வளவு துயரத்திற்கு ஆளானேன்! இப்போது எத்துணைப் பெரும் துயரக்கடலில் அமிழ்ந்துள்ளேன்! நான் ஆட்சியில் இருந்தபோது அன்பு செலுத்தி, அன்பு பெற்றேனே“ என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன். ஆனால் எருசலேமில் நான் புரிந்த தீமைகளை இப்போது நினைவுகூர்கிறேன் அங்கு இருந்த பொன், வெள்ளிக் கலன்கள் அனைத்தையும் கவர்ந்து சென்றேன் யூதாவில் குடியிருந்தவர்களைக் காரணமின்றி அழித்தொழிக்கும்படி கட்டளையிட்டான். இதனால்தான் இந்தக்கேடுகள் எனக்கு வந்துற்றன என நான் அறிவேன். இப்போது அயல்நாட்டில் துயர மிகுதியால் அழிந்துகொண்டிருக்கிறேன்” என்று கூறினான்.

**பதில்பாடல் :** ஆண்டவரே நீர் அளிக்கும் விடுதலை
குறித்து அகமகிழ்வேன்

## நற்செய்தி : லூக்கா 20 : 27 - 40

அக்காலத்தில் உயிர்த்தெழுதலை மறுக்கும் சில சதுசேயர் இயேசுவை அணுகி, ”போதகரே, மணமான ஒருவர் மகப்பேறின்றி இறந்துபோனால் அவர் மனைவியைக் கொழுந்தனே மனைவியாக ஏற்றுக் கொண்டு தம் சகோதரருக்கு வழிமரபு உருவாக்க வேண்டும் என்று மோசே எழுதி வைத்துள்ளார். இங்குச் சகோதரர் எழுவர் இருந்தனர். மூத்தவர் ஒரு பெண்ணை மணந்து மகப்பேறின்றி இறந்தார். இரண்டாம், மூன்றாம், சகோதரர்களும் அவரை மணந்தனர். இவ்வாறே எழுவரும் மகப்பேறின்றி இறந்தனர். கடைசியாக அப்பெண்ணும் இறந்தார். அப்படியானால் உயிர்த்தெழும்போது அவர் அவர்களுள் யாருக்கு மனைவி ஆவார்? ஏனெனில் எழுவரும் அவரை மனைவியாகக் கொண்டிருந்தனரே?” என்று கேட்டனர். அதற்கு இயேசு அவர்களிடம், ”இக்கால வாழ்வில் மக்கள் திருமணம் செய்து கொள்கின்றனர். ஆனால் வருங்கால வாழ்வைப் பெறத் தகுதி பெற்ற யாரும் இறந்து உயிர்த்தெழும்போது திருமணம் செய்து கொள்வதில்லை. இனி அவர்கள் சாகமுடியாது அவர்கள் வானதூதரைப்போல் இருப்பார்கள். உயிர்த்தெழுந்த மக்களாய் இருப்பதால் அவர்கள் கடவுளின் மக்களே. இறந்தோர் உயிருடன் எழுப்பப்படுவதைப் பற்றி மோசே முட்புதர் பற்றிய பகுதியில் எடுத்துக் கூறியிருக்கிறாரே, அங்கு அவர் ஆண்டவரை, ”ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள் யாக்கோபின் கடவுள்” என்று கூறியிருக்கிறார். அவர் இறந்தோரின் கடவுள் அல்ல மாறாக, வாழ்வோரின் கடவுள். ஏனெனில் அவரைப் பொறுத்த மட்டில் அனைவரும் உயிருள்ளவர்களே” என்றார். மறைநூல் அறிஞருள் சிலர் அவரைப் பார்த்து, ”போதகரே, நன்றாகச் சொன்னீர்” என்றனர். அதன்பின் அவர்கள் அவரிடம் எதையும் கேட்கத் துணியவில்லை.

**தியானம்:** இறை வார்த்தைகளுக்கு வரிக்கு வரி அர்த்தம் கொடுக்காது, ஆவிக்குரிய விதத்தினில் நாம் தியானிக்கும்போது எமக்கு எவ்வாறான மரணம் ஏற்படலாம்? நாம் சிலவேளைகளில் மனம் கலங்கி, நாம் வாழும் வாழ்க்கைக்கேற்ப எமக்கு நித்திய நரகமா? அல்லது மோட்ச்சமா? கிடைக்குமென எமக்கு நாமே தீர்ப்பிட்டுக் கொள்ளமுடியும். ஏனெனில், எமக்குத் தீர்ப்பிட எமக்கு நாமே சிறந்த நீதிபதி இறந்துபோன ஆன்மாக்களைக் குறித்துத் தியானிக்கும் இம்மாதத்தில், எமது மரணம் குறித்தும் அதன் பின்னர் எமது ஆன்மா அடையவிருக்கும் வாழ்வு தொடர்பாகவும் ஆராய்வது பொருத்தமானது. எமது மரணம் தொடர்பாக நாம் சிந்திக்கும்போது பல்வேறுபட்ட நம்பிக்கைகள், நிட்சயமற்ற தன்மைகள், ஏற்பட இடமுண்டு. வான்வீடு ஒன்று உண்டா? அது எப்படிப்பட்டதாக அமைந்திருக்கலாம்? அங்கே நாம் என்ன செய்யக்கூடும்? அங்கிருக்கும்போது எமது நெருங்கிய உறவுகளோடு (குறிப்பாக எமது குடும்ப உறவுகள் மற்றும் நெருங்கிய நண்பர்கள்) எமது தொடர்புகள் எப்படி அமையக்கூடும்? என்று கூட நாம் சிந்திக்கலாம். எமது பாவக் காரியங்களின் நிமித்தம் இறைவன் தமது வான்வீட்டில் அனுமதிக்கமாட்டார். நாம் இறை பிரசன்னத்திற்கும், பரலோக மகிமைக்கும் தகுதியற்றவர்கள் எனவும் பயமூட்டும் சிந்தனைகளும் எமது மனதில் ஏற்படலாம். மாறாக வான்வீட்டிலே துன்பமோ, கவலையோ, வேதனையோ, வேற்றுமைகளோ, பசியோ, பஞ்சமோ அல்லது உறவுகளின் அன்போ பாசமோ இருக்காது. வானதூதர்களையும் புனிதர்களையும் போன்று நாமும் அனுதினமும் இறைபிரசன்னத்தில், இறைவனது தெய்வீக திருவொளியில் மகிழ்ச்சியோடு போற்றிப், புகழ்ந்து, ஆர்ப்பரிப்போம் எனவும் நம்பிக்கையூட்டும் சிந்தனைகள் எமக்குத் தெரிவிக்கலாம். இறந்துபோன ஆன்மாக்களைத் தியானிக்கும் இம்மாதத்தில் இன்றைய நற்செய்தி வாசகத்தின் அடிப்படையில் எமது பாவநிலையை, இயலாத்தன்மையை, பெலவீனங்களை இறைவனின் பாதத்தில் ஒப்படைப்போம். பரிசுத்த ஆவியின் வல்லமையை எம்மீது நிறைவாகப் பொழியுமாறு பரலோக தகப்பனிடம் இரந்து மன்றாடுவோம் செய்வோம். பரிசுத்த ஆவியாரின் துணையோடு அனைத்தையும் வென்றெடுக்க முடியுமென நம்பிக்கை வைப்போம். எமக்குப் புரியாததும் நாம் அறியாததுமான காரியங்களை எமது துணையாளர், இறைவனின் தூய ஆவியார் எமக்குப் புரிய வைப்பார். துணையாளன் என்கின்ற நாளாந்த இறைவார்த்தையை அச்சேற்றி இறைவார்த்தை பகிர்ததால் முன்றின்று செய்கின்ற புதவாழ்வு குழவினரின் 23வது ஆண்டு நிறைவு விழா இன்று. அவர்களுக்காகவும் இறைவனிடம் செபிப்போம். இவர்களின் பணி சிறக்கவும், குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படவும், தொடர்ந்து மன்றாடுவோம்.